ஏப்ரல் – 2014 • மாத இதழ் ரூ.20

தொழில் உலகம் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

# தமிழக விவசாயி உலகம்



## இயற்கைச் சீற்றங்களைத்தாங்கி வளரும் புதிய நெல் ரகம் சிகப்பி!



## தென்னை, வாழை வளம்பெற உதவும் சுப்ரிட்டா!

தூத்துக்குடி இந்துஸ்தான் பயோடெக் அறிமுகம்



## கோடை காலத்தில் கறவை மாடுகள் பராமரிப்பு!

# இயற்கை சீற்றங்களைத்தாங்கி வளரும் புதிய நெல் ரகம் சிகப்பி!

## அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் உழவியல் மற்றும் விரிவாக்க ஆராய்ச்சியின் வாயிலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது



தமிழகத்தில் அதிக அளவு மழை மற்றும் இயற்கைச் சீற்றங்களால் கடுமையாக பாதிக்கபடும் மாவட்டங்களான கடலூர். நாகபட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சை காவிரி பாசனப் பகுதி மாவட்டங்கள் உள்ளன, சில காலம் மழை பெய்யாமலும். மறுபுறம் அதிக அளவு மழை பெய்வதுமான தட்பவெப்ப நிலை நெல் விவசாயிகளின் சாகுபடியையும், அவர்களின் பொருளாதார நலன்களையும் வெகுவாக பாதிக்கச் செய்கின்றது, இத்தகைய சூழலில் சிறு மற்றும் குறு விவசாயிகள். நடுத்தர விவசாயிகள். பண்ணை மகளிர். விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆகியோர் அதிகளவு நஷ்டமடையும் நிலையில் தங்கள் விவசாய நிலங்களை விற்றுவிட்டு வேறு தொழிலுக்கு நகரங்களை நோக்கிச் செல்லும் போக்கு தொடர் நிகழ்வாகிவிட்டது,

“நெற்களஞ்சியம்” என்று போற்றப்படும் காவிரி பாசனப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும் நெல்லின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை கடும் இயற்கை சீற்றக் காலங்களில் பாதுகாக்கவும் ‘சிகப்பி’ என்ற புதிய நெல் ரகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தின் உழவியல்துறையைச் சேர்ந்த வல்லுனர்களின் தொடர் உழவியல் மற்றும் விரிவாக்க ஆராய்ச்சிகள் வாயிலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, அதிகளவு வெள்ளத்தையும், மழையையும் தாங்கி வளரும் தன்மை கொண்ட நடுத்தர குட்டை உயரம் (122c, 125e) கொண்ட இப்புதிய ரகம் 150 முதல் 154 நாட்களுக்குள் அறுவடைக்குத் தயாராகும் தன்மை கொண்டது.

### புதிய சிகப்பி நெல்லில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க முயற்சிகள்:

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் கடலூர். நாகை. திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் 123 இடங்களில் விவசாயிகளின் வயல்களில் மேற்கொள்ளப்பட்ட பல பகுதி உழவியல் ஆய்வில் (Multi Location Trails) சிகப்பி நெல் ரகம் நேரடி ஆய்வுகளின் அடிப்படையில் பயிரிடப்பட்டு வெற்றிகரமாகச் சாகுபடியும் செய்யப்பட்டுள்ளது. இது ஏறத்தாழ 10 நாட்கள் வரை நீரில் மூழ்கி இருந்தாலும் பாதிப்புக்குள்ளாகாது.

சராசரியாக விவசாயிகளுக்கு 3439 கிலோ ஒரு எக்டர் என்ற அளவில் விளைச்சல் தந்தது, இது தனது ஒப்பிட்டு இரகமான சி,ஆர், 1009 விடவும் 5.03 சதவீதம் அதிகமாகும்.

கடந்த 2008 முதல் 2010 வரை உள்ள ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழக உழவியல்துறையைச் சார்ந்த ஆய்வுப் பண்ணையில் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த இரகமானது அதிகளவு நீர் தேங்கிய நிலையில் சராசரியாக 3561 கிலோ எக்டர் மகசூலை தந்தது, இது தனது ஒப்பிட்டு ரகமான சி, ஆர், 1009 ரகத்தைவிட 56.2 சதவிகிதம். அதிக மகசூலைத் தந்தது.

சி,ஆர்,1009 மற்றும். ஐ,ஆர், 40931 ஆகிய இரகங்களை ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்ட ஐ,ஆர் 85262Ç 85 என்ற ரகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட சிகப்பி நெல் ரகம் விவசாயிகளால். பெரிதும் விரும்பிச் சாகுபடி செய்யப்படுகிறது,







சி,ஆர், 1009 இரகத்தை ஒத்து இதன் விதைகள் குட்டை. திரட்சியாக வெண்மை நிறம் கொண்டது. மேலும் இலைச் சுருட்டுப்புழு,. தண்டுத் துளைப்பான், தத்துப்பூச்சி, செம்புள்ளி நோய், குலை நோய் மற்றும் துங்ரோ நோய் ஆகியவற்றில் மிதமான அளவே பாதிக்கப்படுவதாலும், நன்செய் நிலங்களில் விளையும் பாரம்பரிய ரகத்தைவிட அதிக விலை வேளாண் சந்தைகளில் பெற்று தருவதால் ‘சிகப்பி ரகம்’ சிறு மற்றும் குறு விவசாயிகள், நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளிடமும் அதிகளவு வரவேற்புப்பெற்றுள்ளது.

காவிரி பாசன பகுதி மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், கடலூர் மற்றும் நாகை மாவட்டங்கள் மற்றும் அதிகளவு நீர் தேங்கி உள்ள மழை காலத்தில் நன்செய் பகுதிகளில் சம்பா விதைப்பிற்கு (வட கிழக்கு பருவமழை) காலத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது.

### சிகப்பி (ஐ,ஆர் 07 எப் 291 C சிறப்புத் தன்மைகள்

எனவே தமிழக விவசாயிகள் இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி வளர்ந்து அதிகளவு மகசூல். மற்றும் சந்தை வாய்ப்புள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக புதிய உழவியல் கண்டுபிடிப்பான சிகப்பி நெல் இரகத்தைச் சாகுபடி செய்து அதிக இலாபம் பெறலாம்.

கட்டுரை:
முனைவர் இராம, கதிரேசன் பேராசிரியர்.
உழவியல்துறை. வேளாண்புலம்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 608 002,
தொலைபேசி - 04144 239816
அலை பேசி - 9655188233

## வருவீரோ பெரியய்யா?



வானம் கதறியழ, வான்மழையும் கண்ணயர
கானம் பாடிவரும் கருங்குயிலும் சேர்ந்துஅழ
ஆணும் பெண்ணுமிங்கே அழுதழுதக் கண்ணீரும்
ஆறாய்ப் பெருகுதய்யா ஆரிடம்போய்ச் சொல்வதய்யா?
(வானம்

வாய்க்கால் வரப்புகளும் வாய்திறந்துக் கதறியழ
நாற்றங் கால்நட்டின் நண்டுநத்தை விம்மியழ
காற்றும் நாற்றுமிங்கேக் கசிந்துருகும் கண்ணீரும்
கடலாய்ப் பெருகுதய்யாக் கார்மேகம் கருகுதய்யா?
(வானம்

பச்சைப் பசும்புற்கள் பனித்துளியை இழந்ததய்யா
பருத்திச் செடிகளுமே பஞ்சுமனம் மறந்ததய்யா
கரும்புக் கூட்டங்களும் கனிச்சாறைத் தேடுதய்யா
வருந்தி அழைக்கின்றோம் வருவீரோ பெரியய்யா?
(வானம்

நன்செய் புன்செயெலாம் நரம்பிழந்துத் தவிக்குதய்யா
ஆறும் கால்வாயும் அழுதழுதுத் துடிக்குதய்யா
பாழும் பச்சைமரம் பட்டுத்தான் போனதய்யா
வாழும் செடிகொடியும் வாழ்விழந்து மடியுதய்யா
(வானம்

பட்டு மழலைபோல் படபடவெனச் சிரிப்பீரே
எட்டுத் திக்கென்றும் எழுச்சியுரை உரைப்பீரே
கொட்டும் முரசாகக் குடிவுயர வாழ்ந்தீரே
கட்டுக் கடங்காதுக் கதறுதய்யாத் தமிழகமே (வானம்

-அவையரசன்